கண்ணீர்க் கோட்டை

தில்லை வில்லாளன்

செந்தமிழ்ப் பதிப்பகம்
கீழராஜ வீதி :: புதுக்கோட்டை

முதற் பதிப்பு 1949 மார்ச்

விலை அணா 6

பதிப்புரை

நண்பர் தில்லை வில்லாளன் திராவிட எழுத்துல கில் புகழ்பெற்று விளங்குகிறார்; அவர்தம் நெடுங் கதைகள் சிறந்த குறிக்கோள்களை அடிப்படை யாகக்கொண்டு அமைக்கப் படுகின்றன. அப்படி யொன்று "கண்ணீர்க் கோட்டை" என்னும் இக்கதை நூல். பெண்ணுலகம் தாம்படுகின்ற துன் பத்திற் கெல்லாம் பழிவாங்க எண்ணிவிடுகிறது என்று வைத்துக் கொள்ளுங்கள். அதன் விளைவு எப்படி யிருக்கமுடியுமென்பதையே கண்ணீர்க் கோட்டை சித்திரிக்கிறது. சிறந்த கற்பனை; இனிய தமிழ்நடை; விறுவிறுப்பான கதைப் போக்கு — இவை இந்நூலின் சிறப்புகள்.

செந்தமிழ்ப் பதிப்பகத்தார்

அன்புப் படையல்

'சாமி' ஒரு சிறுகதை எழுத்தாளர். அவர் என் அருமை அண்ணன். அவர் எழுதிக் குவித்த எழுத்துக் குவியல், ஒரு பொற்குவியல்! அதிலே ஒரு கிழிந்த தங்கத்தகடு என்கண்களில் பட்டது. அதிலே சிந்தனைச் சிரிப்பு விசி, அறிவு மூச்சு விட்டுக்கொண்டிருந்த எழுத்துகள் எழுப்பி விட்ட சிந்தனைச் சித்திரமே இந்தக் கண்ணீர்க் கோட்டை.

அவரது பாதையை மாற்றி விட்டது, வாழ்க்கையிலே சுழன்றடிக்கும் வறுமைச் சூறு வளி, குடும்பக் கவலையெனும் கடுங்காற்று! ஆனால் என்னை மட்டும் அதே பாதையில் இழுத்து விட்டது. அவரின் எழுத்துழைப்பாளிகள் வெட்டிச் செய்த கருத்துச் சுரங்கம் மறக்க முடியாதது. அவருக்கு இந்தச் சிறு கற்பனைப் பொங்கலை அன்புப் படையலாக்குகிறேன்.

தில்லை வில்லாளன்

1. விநோதமான காட்சி!

சிவகாமி ஓடினாள்.

எதிரில் ஒரு கோட்டை மதில் தெரிந்தது. அதைச் சுற்றிலும் ஒரு பெரிய அகழ்! அதனைத் தாண்டிச் செல்ல ஒரு கோட்டை வாயில் — இவை தாம் அவளது கண்களில் சட்டென்று பட்டன.

சிவகாமி நெருங்கினாள். அவள் கண்களில் பட்ட காட்சியோ மின்னலிட்டது. வெளிச்சம் போட்டது!

அவை கண்ணாடியாலானவையோ, என்னவோ என்று ஐயம் ஏற்பட்டது அவளுக்கு — ஆம். அப்படி வெள்ளிச் சிரிப்பு வீசியது அந்தக் கோட்டை மதில்! என்ன ஆச்சரியம்...........அங்கே இரண்டு பெண்கள வாளேந்தி வாயிற் காப்போராக நின்றார்கள்? ஆனால் அவர்கள் பார்க்க விநோதமாகத் தெரிந்தார்கள! பைசா நகரச் சாய்ந்த கோபுரம்போல ஆச்சரியத்தை அள்ளி வீசினார்கள்! ஏன்? காற்றும் உள்புகாமல் 'வாரிவழித்துக்' கட்டும் பதினாறு முழச் சேலையோ, உடலைக் 'கடித்துத் தின்றுவிடுவேன்' என்று பயமுறுத்தும் ஜாக்கட்டோ, நெற்றியிலே ஒ்பாட்டோ, இன்னும் 'மேனா மினுக்கித்தனங்கள்' எதுவுமே அங்கு தலை காட்டவில்லை! அப்படி அவர்கள் மாறியிருந்தார்கள்! சாதாரணமான நான்குமுழ வேட்டியும், ஒரு துண்டும் அணிந்திருந்தார்கள்! அங்கங்கள் அத்தனையையும் மறைக்கவேண்டும் என்று அக்கரை காட்டவே இல்லை, அந்த அரைகுறை ஆடைகள்!

சிவகாமி கோட்டை வாயிலையடைந்தாள். காவற்காரிகள் கைகூப்பி வரவேற்றனர். உடனே ஒரு தங்கப் பல்லக்கு வந்தது. அதனைச் சுமந்துவந்த நால்வரும் ஆண்கள்! அவர்கள் தலையில் ஒரு கருப்புத் துணி போர்த்தப்பட்டிருந்தது. அவர்கள் உடலை மறைத்திருந்த ஆடைகள் 'பாலாமணி பக்காத் திருடன்' போட்டிருந்த கட்டம் போட்ட முரட்டுத் துணியாலானவை! அவர்கள் சிவகாமியை வணங்கினார்கள்.

சிவகாமி விழித்தாள். அவளுக்கு எல்லாம் புதிராகவே தெரிந்தன. அவள் மிரள மிரள விழித்தாள். பிறகு அவர்களைப் பார்த்தாள்.

"எழிலரசி, இங்கு தங்கள் கட்டளை எதுவானாலும் நிறைவேற்றி வைக்கப்படும். ஆகவே தயங்காமல் ஆணையிடுங்கள்"

— காவற்காரிகளில் ஒருத்தி தந்த விளக்கவுரை இது!

"இதோ வந்துவிட்டேன். சற்றுக் காத்திருங்கள்" என்றாள் சிவகாமி.

அவள் கோட்டை மதிலை நெருங்கினாள். அதனைத் தொட்டுப் பார்க்க வேண்டும் என்ற ஆசை அவளைப் 'பிய்த்துப் பிடுங்கித்' தின்றது! தொட்டாள். தொட்ட விரல் துவண்டது. திடுக்கிட்டாள். ஏன்? அவளால் அவளை நம்பவே முடியவில்லை. அந்த மதில் வெந்நீரால் செய்யப்பட்டிருந்தது............! நீர், மதிலாக நிற்கிறது! குனிந்தாள். அவள் நின்ற அடித்தளத்தில் நொறுங்கிய எலும்புத் துகள்கள் தங்கள் துயரக்கதையைச் சொல்லலாமா என்று யோசித்துக்கொண்டிருந்தன! அவளது கண்கள் ஊடுருவிப் பாய்ந்தன. அகழிலே நீர் ஓடவில்லை, குருதி பொங்கி வழிந்துகொண்டிருந்தது. அந்தக் குருதியிலே 'வெள்ளிச் சிலைகள்' மிதந்துகொண்டிருந்தன. ஆம், பச்சிளங் குழவிகள் நீந்திக்

கொண்டிருந்தன. அவள் கண்கள் தங்களது 'டெலஸ்கோப்' வேலையை முடித்துக்கொண்டன. ஆனால் அவள் உடல் வெந்து கருகிவிடும்போல இருந்தது. அப்படி ஒரு வாடைக்காற்று 'உஸ்' 'உஸ்' என்று முகாரிபாடிக் கொண்டிருந்தது!

"தலைவியே, செல்வோமா?"

நால்வரில் ஒருத்தி கேட்டாள்.

சிவகாமிக்கு அவளைக் கேட்டு, அந்த விநோதக் கோட்டையின் விபரம் முழுவதும் தெரிந்துகொள்ள வேண்டும் என்ற எண்ணம பிறந்தது. ஆகவே அவர்களிலே ஒருத்தியை அழைத்தாள்.

"அம்மையே, இங்கென்ன, எல்லாம் விபரீதமாக இருக்கிறதே!" என்றாள் சற்றுத் தயங்கிய குரலில்!

"இதுதான் கண்ணீர்க்கோட்டை. மற்ற விபரங்கள் போகப் போகத் தெரியும்" என்றாள், மற்ற விபரங்கள் எமது வெண் திரையில் கண்டு களிக்க என்று போடுகிற சினிமா விளம்பரக்காரனைப் போல!

சிவகாமி பல்லக்கில் ஏறிக்கொண்டாள், அந்தக் 'கள்ளபார்ட்டுகள்' சுமந்து சென்றனர். போகும் வழியிலே அவர்கள் பாடியபாட்டு அவளுக்கு மேலும் ஆச்சரியத்தைக் குழைத்து வழித்து எடுத்தூட்டிற்று!

'எங்கெங்குங் காணினும் சக்தியடா' அவர்கள் பாடிய பாட்டுத்தான் அது! அந்தப் பாட்டு முடிவதற்குள் பல்லக்கு ஒரு இடத்திலே நின்றது! திரையை விலக்கித் தலையை நீட்டிப் பார்த்தாள்.

அந்த மாளிகையும் பழைய கோட்டையைத்தான் நினைப்பூட்டிற்று. அதுவும் கண்ணாடிபோல 'டால்' அடித்தது! பல்லக்கு வந்து நின்றதும் இரண்டு பெண்கள் வந்து வரவேற்றார்கள்- அவர்களும் பழைய காவற்காரிகள் போலக் காட்சிதந்தார்கள்!

"வருக தலைவியே!" என்று வரவேற்றாள் ஒருத்தி.

"வாழ்க, சிவகாமி! வாழ்க எங்கள் தலைவி!"

என்ற முழக்கம் வானைப்பிளந்தது. அதற்குள் அத்தனை பேரும் எங்கிருந்துதான் வந்தார்களோ, தெரியவில்லை! அந்தக் கூட்டம் சிவகாமியை ஆர்வத்துடன் வரவேற்றது. அவள் அந்தக் கூட்டத்தைச் சுற்றிலும் தன் கண்களைச் சுழற்றி விட்டாள். அவை தெரிந்து வந்த செய்திகளில் முக்கியமானவை இரண்டு. ஒன்று அங்கு ஆண்களே இல்லை, இரண்டாவது, அங்கு பெண்களில் வயது முதிர்ந்தவர்கள் 'மருந்துக்கும்' கிடைக்கவில்லை! எல்லோரும் கட்டிளங் குமரிகள், வடித்தெடுக்கப் பட்ட பொற்சிலைகள்!

"நீங்கள் எல்லோரும் கலைந்து செல்லுங்கள்" என்று "விக்டோரியா" குரல் கொடுத்தாள் சிவகாமி.

ஒருத்தி மட்டும் நின்று கொண்டிருந்தாள். அவள் தலைவியின் கட்டளையை நிறைவேற்ற வில்லை!

"நீ மட்டும் நிற்பானேன்?"

"நான் தலைவிக்கு அந்தரங்கச் செயலாளி!"

"அப்படியானால் என்னுடன் வா"

சிவகாமி நேராக மாளிகையினுள் நுழைந்தாள். அது எங்கும் ஒளி வீசிக்கொண்டிருந்தது. சுவரிலே பல இடங்களில் நகைகள் போடப்பட்டிருந்தன. சில இடங்களில் ஆண்சிலைகள் நிறுத்தப் பட்டிருந்தன. அவற்றிற்கு அலங்காரம் அபாரமாகச் செய்யப்பட்டிருந்தது! காதுக்குத் தொங்கட்டான், தோடு, கழுத்துக்கு அது பளுவு தாங்கமுடியாமல் வளைகிற வரையில் நகைச்சுமை ஏற்றப்பட்டிருந்தது! சிவகாமிக்குச் சிரிப்புத்தான் வந்தது.

"உன் பெயர் என்ன?"

"தலைவியே, என் பெயர் மனோகரா—ன்?"

சிவகாமி 'களுக்' கென்று சிரித்தாள்!

"அது என்ன—ன்"

"அதுதான் கண்ணீர்க் கோட்டையின் மாற்றுப் பெயர்—முன்பு எனக்கு மனோகரி என்று பெயர்"

"நான் இக்கோட்டைக்குத் தலைவி' இல்லையா?"

"ஆமாம்"

"அப்படியானால் எனக்கு இக்கோட்டையின் முழு விபரமும் தெரிய வேண்டுமே!"

"கட்டாயம் விளக்குவேன்"

"நீங்கள் அனைவரும் என்னைத் தலைவியாக ஏற்றிருக்கிறீர்கள். இது உண்மைதானே?"

"இது மறுக்க முடியாத உண்மை"

"ஆகவே உங்களைப்பற்றி........."

"நீங்கள் அறிந்துகொள்ள வேண்டியது அவசியத்திலும் அவசியம். அதனையும் சொல்லுகிறேன், சாட்சியோடு காட்டுகிறேன். அதுதான் என் வேலை!"

"அப்படியானால் நகர சோதனைக்குப் புறப்படு, போவோம்"

சிவகாமி, தான் தலைவியாக்கப்பட்டவுடன் எப்படி நடந்துகொள்ள வேண்டுமோ அப்படியே நடந்துகொண்டாள். நடையிலே கொஞ்சம் கம்பீரத்தைக் கூட்டிக்கொண்டாள். பேச்சில் கொஞ்சம் கடுகடுப்பும், எடுப்பும் ஏற்றிவிட்டாள். பார்வையில் 'ராஜகளை'யைச் சொட்டவிட்டாள்! மனோகரா—ன் அவளைப் பின் தொடர்ந்தாள்.

2. அந்தப்புரத்திலே! ....

சிவகாமி அந்தப்புரத்திறுள் நுழைந்தாள். அங்கு நல்ல நறுமணம் வீசிக்கொண்டிருந்தது! அங்கு அவளைப் பல்லக்கில் சுமந்துவந்த ஆட்களைப் போலவே பல கட்டம் போட்ட 'சட்டைமாட்டிகள்' நின்றுகொண்டிருந்தார்கள். ஒருவன் ஓடோடி வந்தான். சிவகாமியின் ஆடைகளைக் களைந்தான். அவளுக்கு நாணம் பிடுங்கியது! பெண்மை நடுநடுங்கிற்று! இன்னொருவன் வந்தான். குளிக்கும் அறைக்கு அழைத்துச் சென்றான். குளியல் முடிந்ததும் புதுவித ஆடை பூட்டிவிட்டான் ஒரு அடிமை. மணம் பூசிவிட்டான் இன்னொருவன்!

சிவகாமிக்குத் தாங்க முடியாத வெட்கம்! என்ன செய்வாள்? அந்தக் கோட்டையின் விபரீதமான சட்டதிட்டங்களுக்கு அவள் கட்டுப்படத்தான் வேண்டும்! அது மட்டுமா? அவளல்லவோ, எதிர்ப்பில்லாத 'எலிசபெத்' இனி கண்ணீர்க் கோட்டைக்கு!

ஒருவன் அறுசுவை யுணவைச் சுமந்து வந்தான்; அங்கிருந்த பளிங்கு மேடையிலே பரப்பினான். சிவகாமியும், அவளது அந்தரங்கத் தோழியும் உணவு கொள்ளத் தொடங்கினார்கள். ஒரு ஆணடிமை விசிறி கொண்டு வீசினான். உணவு முடிவதற்குள் 'ஆயிரம்' முறை ஓடிவந்து நின்று உபசாரம் செய்தான் அந்த 'அடிமை நளன்'!

"மனோகர், முதலில் என் கேள்விகளுக்கு விடை சொல்லவேண்டும்"

"எதை வேண்டுமானாலும் கேளுங்கள்"

"முதலில் நமது கோட்டைமதிலைப்பற்றிச்சொல்லு!"

"அம்மா, அங்கே நீங்கள் பார்த்தது உண்மையில் நீரால் ஆன நெடுஞ்சுவரே! நீங்கள் தொட்டபோதும் வெதுவெதுப்பாக இருந்திருக்குமே! அதுதான் தமிழகத்தில் விதவைகள் சிந்தும் கண்ணீர்! கீழே குருதி பொங்கியதே, அது கண்களில் நீர்வற்றி விட்டபிறகு வடிந்த இரத்தம்! அந்தக் குழந்தைகள் இருட்டறையில் கருவில் சிதைந்தவை, சப்பாத்திக் காடுகளில் சமாதி செய்யப்பட்டவை, குளங்களில் தூக்கி எறியப் பட்டவை' ஆற்றிலே மிதந்தவை, மண்ணிலே புதைந்து கிடந்தவை... இப்படிப் பலவிதம். இங்கு முதலைகளாக மாறிவிட்டன! அந்த எலும்புத் துகள்கள், பெண்களைப் பரிதவிக்கவிட்ட ஆண்களை அம் முதலைகள் அழுகச் செய்து உண்டு ஏப்பம்விட்டு மிஞ்சியவை! அந்தக்காற்று, விதவைகள் விடும் பெருமூச்சு"

"அதுசரி, ஏன் ஆண்கள் கட்டம்போட்ட கைதிச் சட்டைகள் மாட்டியிருக்கிறார்கள்?"

"இக் கோட்டைகளில், ஆண்கள் அத்தனைபேரும் கைதிகள், பெண்கள் அத்தனை பேரும் அரசிகள்"

"அவர்கள் தலையில் கருப்புத் துணியும் ஏனோ?"

"ஆண்களாகப் பிறந்து இதுவரைப் பெண்களுக்கு இழைத்த தீங்குகளுக்கு வருந்துகிறோம் என்று வருந்தக்குறிகாட்ட!"

சிவகாமிக்கு இப்பொழுதுதான் சிறிது தெளிவேற்பட்டது. பிறகு கேள்விகளுக்கு மேல் கேள்விகள் அடுக்கலாம் என்று நினைத்துக்கொண்டு' கேட்ட விளக்கங்களை மனதிற்குள்ளேயே திருப்பவும் ஓடவிட்டாள்! மனோகரன் அடுத்த கேள்வி என்ன கேட்பாளோ என்று அவளது அழகிய முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தான். அவளது உதட்டசைவில் அவனது விழிவண்டுகள் மொய்த்தன!

"நீங்கள் ஆண்டுக்கொரு தலைவி தெரிந்தெடுப்பீர்களா?"

"இல்லையே!"

"பின் ஏன் என்னை..................."

"எங்கள் தலைவி தாயகத்திற்குத் திரும்பிவிட்டாள்!"

"ஏன்?"

"அவளைப் பெற்றெடுத்த 'எமனும் எமியும்' அவள் காதலித்த கண்ணாளனையே மணந்துகொள்ள இசைந்து விட்டார்கள்!"

"ஆகவேதான் என்னை அடுத்தபடி தெரிந்தெடுத்திர்களாக்கும்"

சிவகாமி தன்னைப்பற்றி அயளுக்குத் தெரியுமா என்று அறிந்துகொள்ள வேண்டும் என்று எண்ணினாள். ஆகவே மற்றும் ஒரு முறை 'ஆசிரிய—மாணவ' முறையைத் தொடங்கி வைத்தாள்!

"என்னைத் தலைவியாகத் தெரிந்தெடுக்க என்னிடம் உள்ள தகுதிகள் யாவை?"

"தாங்கள் ஒரு இளம் விதவை"

"விதவைக்கு விருதா, தலைவிப் பட்டமா?"

"இது அர்த்தமுள்ள கேள்வி, அந்த மதிகெட்ட உலகத்தில்! இங்கு இந்தக் கேள்வியைக் கேட்டால் அனர்த்தம் விளையும், ஆறுமாதச் சிறைவாசம் கிடைக்கும்!"

3. மறந்த கதை

சிவகாமி சிந்தனைச் சிலையானாள்!..................

"சிவகாமிக்குப் பகவான் இப்படித் துரோகம் செய்யக்கூடாது! பச்சிளங்குழவிப் பருவத்தில் பாறுங்கல்லைத் தூக்கிப் போட்டுவிட்டான். அவனுக்குக் கண்ணில்லையா? இந்த அநியாயம் அடுக்குமா?"

"ஏதோ 'ப்ராப்தம்' அவ்வளவுதான். சிவகாமிக்குக் கொடுத்து வைத்தது இதுதான் போலும்! நாம் என்ன செய்வது? மகளை எவ்வளவோ செலவு செய்து சீரும் சிறப்புமாய்க் கட்டி வைத்தேன். ஆண்டவனே குறுக்கில் நிற்கிற பொழுது, நாம் மனிதர்கள் எப்படி மாற்றி விட முடியும்?"

"தங்கை சிவகாமி 'அறுதாலி'யாகிவிட்டாளா? இது அடுக்குமா? அப்பொழுதே நான் 'பண மூட்டையைப் பார்த்துப் பல்லிளித்து விடாதீர்கள்! பண மூட்டை தான், நோய்முட்டையாக இருக்கும்! வேண்டாம்...' என்று கத்தினேன். கேட்டாரா தந்தை? 'போடா, உன் வேலையைப் பாருடா. இதெல்லாம் உன்னைப் போலப் பொடியன்கள் தலையிடுகிற காரியமில்லை' என்று வாயடைத்து விட்டார்!"

"சிவகாமியின் கணவன் செத்துவிட்டானும். ஐயோ பாவம்!"

"அந்தப் பெண்ணுக்கு இப்படி வரக்கூடாது. துன்பம் வருவதுண்டு. இப்படி மலை பெரிதாக வரக்கூடாது! அவள் இனி எப்படி வாழ்வாள்!"

....

இப்படி மறைந்துபோன மிட்டாதர் சோமசுந்தரத்திற்கு நினைவுப் பாடல்களைச் சிவகாமியின் தந்தை தனபால் முதலியார், தாய் கல்யாணியம்மாள், அண்ணன் அண்ணாமலை, அவளது தோழிகள், உற்றரும், ஊராரும் 'ரிகார்டு' செய்தார்கள்!

ஆனால்!

சிவகாமியோ வருத்தங்கொள்ளவில்லை, மற்றவர்கள் துயரப்படுவதைப் பார்த்துத் தானும் துயரத்தை வலுவில் இழுத்துக்கொண்டாள்!

திருமணத்தின் பொருள் புரியாத காலத்தில் "மாலையும், பட்டுச் சொக்காயும், பாவாடையும், மேளமும், விருந்தும்" செய்து கயிற்றைக் கட்டினார் சோமசுந்தரம். ஆமாம் அவருக்கு அந்தப் பெண்ணின் மீது ஆசை, பெண்ணின் தகப்பனின் மீதோ அவரது ஆதிக்கம் உண்டு! தடையென்ன? அந்த 'பொம்மைக் கலியாணம்' நடந்தது!

பெண் மலர்ச்சியடைகிற வரை அப்பன் வீட்டில் இருக்கட்டும் என்று விட்டுவைத்தார் மிட்டாதார். அவருக்கு அந்தப் பெண்ணின் மீது ஏதோ ஒரு மயக்கம்—ஆகவேதான் அடம் செய்து அந்த குழந்தைக் கலியாணத்தை முடித்துத்தன பிடிவாதத்திற்கு விருந்து நடத்தினார்! அவர் ஏற்கனவே ஒரு மனைவியின் உயிரைக் குடித்து விட்டார். அதோடு மறுமணம் புரிந்து கொண்டார். அவளோ மொக்கு! ஆகவே காசை அள்ளி விதைத்து, இரவிற்கொரு வேசியைத் தன் கட்டில் கழனியில் முளைக்க வைத்து, அவளது இன்பக் கதிர்களை அறுவடை செய்து, காலையில் வைக்கோலாக வண்டியிலேற்றி அனுப்பி விடுவார்!

சோமசுந்தரம் தன் பள்ளிக் காலத்தில் 'சந்திரனு'கியிருக்கிறார்! சற்றுக் காலங்கடந்த பிறகு 'இந்திரன்' தகுதியும் பெற்றுள்ளார்! அவரைப்பற்றிப் புரிந்து கொள்ள இது போதும் என்று இத்தோடு நிறுத்திக் கொள்வோமாக!

இப்படி இவரின் இளமை தேயத்தேயச் சிவகாமியின் பெண்மை வளர்ந்து கொண்டே இருந்தது!

அப்பொழுது அவளது வாழ்க்கைப் பாதையிலே குறுக்கிட்டான் மனோகரன். அவன் அவளுக்குத் தூர பந்து, எட்டத்து உறவினன்! அவன் அங்கு படிப்பதற்காக வந்திருந்தான். அதுவும் அங்குள்ள தொழிற் கல்லூரியில் கல்வி பெறவே அவனது பெற்றோர்கள் தனபால் முதலியாரின் கண்காணிப்பில் விட்டுச் சென்றனர்.

முதலில் முதலியாருக்குக் கொஞ்சம் அச்சம். பிறகு மனோகரனின் தூய உள்ளத்தைப் புரிந்து கொண்டு நிம்மதி யடைந்தார். சிவகாமியும் தூய உள்ளத்தோடுதான் முதலில் பழகினாள். ஆனால் காலதேவன் வளர்த்து வைத்த பருவக் குறும்பு சும்மா இருக்கிறதா? படமெடுத்தாடி விட்டது!

மனோகரன் சிவகாமியைத் தன் இதயத்தில் குடியேற்றி வைத்தான். சிவகாமியோ மனோகரனைத் தன் மூச்சிலும், பேச்சிலும் மூழ்கவைத்துக் கொண்டிருந்தாள்! மனோகரன், சிவகாமியின் எண்ணக் கோவிலில் வண்ணச் சிலையாகக் காட்சி தந்தான்!

ஒரு நாள்..................

மனோகரன் உட்கார்ந்திருந்தான். சிவகாமி வழக்கமான புன்னகையுடன் கூடிய உணர்ச்சியைக் கிள்ளி விடும் ஒரு 'போஸ்' கொடுத்தாள்! உள்ளே வந்தாள்!

"என்ன பலமான யோசனை?"

"ஒரு பெரிய ஆராய்ச்சி"

"எந்தக் கட்டடத்தை எப்படிக் கட்டலாமென்று?"

"ஆமாம் அதுதான் நம் வாழ்க்கைக் கட்டடம்"

"கட்டி விட்டீர்களா?"

"எல்லாம் கட்டிவிட்டேன் ஒன்றுதான்..........."

"என்ன அது?"

"ஒரு மஞ்சள் கயிறு..........."

சிவகாமி துணுக்குற்றாள். அப்பொழுதுதான் அவளுக்கு மிட்டாதார் கட்டிவிட்டிருந்த அந்தக் கயிறு தெரிந்தது! அவள் முகம் மாறுபட்டிருந்த நிலையைச்

சட்டென்று புரிந்துகொண்ட மனோகரன் சிவகாமியின் முகவாய்க் கட்டையைத் தூக்கி நிறுத்தி அவளது கண்கள் சொல்லத் தவித்த 'லைலா-மஜ்னு' 'ரோமியோ, ஜூலியட்' கதைகளைப் படித்தான்!

"ஏன் சிவகாமி இப்படிமாறிவிட்டது உன் முகம்?"

"அதுவா, சொல்கிறேன். பயந்து விடாதீர்கள்!"

"சரி, சொல்லேன்"

"அந்தக் கயிற்றை ஏற்கனவே ஒருவன் என் கழுத்தில் கட்டிவிட்டான்"

"ஆ......................"

மனோகரனுக்கு அப்பொழுதுதான் சிவகாமி மணமானவள் என்று தெரியும். அவன் திடுக்கிட்டுவிட்டான். அவனது எண்ணக்கோட்டையிலே இடிவிழுந்துவிட்டது! அது இடிந்து நொறுங்கிப் பொடிப்பொடியாகி விட்டது!

"அந்தக் கயிற்றுக்கு இருக்கும் சக்தி நம் காதலுக்கு இல்லையா?"

"ஆயிரம் மடங்கு அதிகம், சிவகாமி"

"..........................."

"..........................."

பேச்சிழந்தனர்.

அந்த நேரத்தில் அம்பிகாபதி- அமராவதியின் மீது பாய்ந்த குலோத்துங்கன்போலச் சிறினார் தனபால் முதலியார்!

மனோகரன் வீட்டை விட்டு விரட்டப்பட்டான். ஆனால் சிவகாமியின் மனத்தைவிட்டு அவன் ஓடவே இல்லை!

ஆண்டுகள் உருண்டன. சோமசுந்தரத்திற்குச் சாவுப்பட்டமும், மனோகரனுக்கு இன்ஜினியர் பட்டமும் அளித்தது அந்தக் கடைசி ஆண்டு!

......இப்படிச் சிவகாமி எண்ண மண்டலத்திலே கொஞ்ச நேரம் சிந்தனைச் சிறகைக் கட்டிக் கொண்டு பறந்தாள்; பிறகு இறங்கி வந்தாள்!

4. கலவடம் மாட்டிகள்

சரி, நாம் நகர சோதனைக்குப் புறப்படுவோமா?"

"போவோம்"

சிவகாமியின் கேள்விக்கு விடை சொல்லிக் கொண்டே, மனோகரான் உள்ளே சென்றாள். கொஞ்ச நேரத்தில் வெளியில் வந்தாள்; அவள் கையிலே இரண்டு இலைகள் இருந்தன!

"இந்த இலைகள் ஏன்?"

"நகர சோதனைக்கு மிக முக்கியமானவை!"

"இலைகளால் என்ன செய்வது?"

"இது காணாதவை கண்டான் இலை, இது எதையுங் கேட்டான் இலை! முதல் இலையின் சாற்றைக் கண்களில் பிழிந்து கொண்டால் எதையும், எந்த அண்டத்தில் நடந்தாலும் பார்க்கலாம். இந்த இலையைக் காதுகளில் பிழிந்து கொண்டால் எங்கு, எவர் பேசிக்கொண்டாலும் கேட்கலாம்"

"விசித்திரமான இலைகள், கண்ணீர்க்கோட்டையில் விளைகின்றனவா?"

"இல்லை, தாங்கள் புறப்பட்டுவந்த தாழ்ந்த தமிழகத்தை உயர்த்தப் பாடுபடும் உயரிய கவிஞர் ஒருவர் அளித்த அன்பளிப்பு. அவர் பெயர் புரட்சிக்கவிஞர் பாரதிதாசன்"

இருவரும் புறப்பட்டனர். மாளிகையை விட்டு வெளியில் வந்தனர்.

பட்டப்பகல் போல வெண்ணிலவு வீசிக்கொண்டிருந்தது! அது தூவிய வெள்ளிமா பசுமையான செடிகொடிகளின் மீது படிந்து பார்க்க அழகாக இருந்தது! அந்த வேளையில் இருவரும் போய்க்கொண்டிருந்தனர்

கொஞ்ச தூரத்தில் 'கிணுகிணி' என மணியொலி கேட்டது. மனோகரான் திடுக்கிட்டு நின்றாள். "இப்பொழுது வருகிறவன் கண்ணில் நாம் படக்கூடாது, அது மகா அபசகுனம்" என்று துடித்தாள் அவள். சிவகாமிக்கு ஒன்றும் புரியவில்லை.

அப்பொழுது ஒருவன் வந்தான்......

அவன் கருப்புந் துணியால் முக்காடு போட்டிருந்தான், அவன் காதுகளில் சிறு மணிகளைக் கட்டி யிருந்தான். அவன் கழுத்தில் இரும்புக் கலவடம் மாட்டப்பட்டிருந்தது!

அவன்தான் கலவடம் மாட்டி! பெயர் கோவிந்—தீ.

ஆம், அவனது எஜமானியை — தலைவியை இழந்து விட்டான்! அவள் இறந்த பதினாறும் நாள் அவனது கழுத்தில் இந்தக் கலவடத்தை மாட்டிவிட்டார்கள். அதுவும் பல சடங்குகள் வேதங்களில் போதித்த முறைப்படி முடித்த பிறகு இந்தக் கலவடத்தை அவன் கழுத்தில் ஏற்றி விடுவார்கள். அவனை ஊரில் மற்றவர் 'அறுதாலி' என்று தூறறுவார்கள். 'கலவடா மாட்டி' என்று கேலி பேசுவார்கள். அவனை எந்த நல்ல காரியங்களிலும் விடமாட்டார்கள். அவனைப் பார்ப்பதே பாவம். ஆகவேதான் காதுகளில் மணி கட்டிவிட்டு விட்டார்கள்! அவன் வரும்பொழுதே தலையை ஆட்டிக்கொண்டே வருவான். அப்பொழுது எழும் ஒலியைக் கேட்டு வழியில் வருபவர் ஒதுங்கிக் கொள்வார்கள்.

அவர்கள் திரும்பவும் மணம் செய்து கொள்ளச் சாஸ்திரங்களும், சட்டமும் இடந்தருவதில்லை.

ஆனால், அவர்கள் விபசாரம் செய்கிறார்கள். கலவடம் மாட்டிகள் ஒழுக்கம் தவறுகிறார்கள். அவர்களை இங்கு இருக்கும் பெண்கள் விடுவதில்லை. வேண்டுமென்றே கர்ப்பழித்து விடுவார்கள்! பிறகு அவர்களின் அலங்கோலமான வாழ்வு அம்பலமானதும் நீதிமன்றத்

தில் கொண்டுவந்து நிறுத்தப் படுவார்கள். அந்த தலைவியால் தக்க தீர்ப்பு அளிக்கப்படும். இப்படி அந்தரங்கத் தோழி விளக்கினாள். சிவகாமி மனதிற்குள்ளாகவே சிரித்துக்கொண்டாள்.

அவர்கள் 'அப்பளாக்குடுமி' தான் வைத்துக்கொள்ள வேண்டும்! கிராப் வைத்துக்கொள்ள உரிமையில்லை! கருப்புத் துணி முக்காடு கட்டாயம் இருக்க வேண்டும். ஒரு வேளை உணவுதான் கிடைக்கும். எப்பொழுதும் 'அப்பளக் கச்சேரி' தான் செய்யலாம். மீதி நேரத்தில் கோயில்களில் போய்க் குந்திக் கிடக்கலாம்!

அங்கே அவர்கள் இப்படி, அப்படிச் சுற்றினால் மற்ற மைனர் மாதேவிகள் வட்டமிட ஆரம்பித்து விடுவார்கள்!

..................மனோகரான் வழி நெடுகிலும் கலவட மாட்டிகளின் சரித்திரத்தை 'லெக்சர்' அடித்துக் கொண்டிருந்தாள்!

இப்படிப் பேசிக்கொண்டிருக்கையிலே அந்தக் கலவடம் மாட்டி அந்த வழியே தாண்டிப் போனான். சிவகாமியும், அவளது தோழியும் அவனைப் பின்பற்றிச் சென்றார்கள்!

அவன் 'பூனையடி' போட்டு உள்ளே நுழைந்தான். அப்படியும் அவ் வீட்டுத் தலைவி வெளியில் வந்து விட்டாள்!

"அடே, அப்பளாக் குடுமிப் பயலே, இந் நேரத்தில் உனக்கு வெளியில் என்ன வேலை?"

"கலவடமாட்டிப் பயலுக்கு இத்தனை பெண்ணவமா?"

"ஆணாய்ப் பிறந்தும், அறுதாலியாயும் அடக்கம், ஒடுக்கம் வேணுமாடா"

அக் குடும்ப 'மெம்பர்கள்' வீசிய காரமான கேள்விகள்! அவன் 'சட்டசபைப் பதில்' — அதுதான், இல்லை, தெரியாது போன்றவை — சொன்னான்!

5. அந்த இரவில்!

தலைவியும், தோழியும் இலைகளைப் பிழிந்து கண்களிலும், செவிகளிலும் விட்டுக்கொண்டார்கள்.

"மனோகர், இந்தக் குடும்பத்து நடவடிக்கைகளை மட்டும் கேட்டால் போதும் போலிருக்கிறது"

"ஆமாம், கவனமாக இருங்கள்"

அவர்கள் பார்வையிலே..............

அந்த வீட்டுத் திண்ணையில் தலைவி உட்கார்ந்திருந்தாள். பக்கத்தில் அவளது மகள் உட்கார்ந்திருந்தாள். இன்னொரு திண்ணையில் ஊரிலிருந்து வந்திருந்த பெண் அமர்ந்திருந்தாள். வாசற்படியில் எட்டிப்பார்த்தபடியே ஆண்டிமை நின்று கொண்டிருந்தான்!

கலவடம் மாட்டி நடுநடுங்கிக்கொண்டு எதிரில் நின்றுகொண்டிருந்தான்!

தலைவியின் கண்களில் குங்குமத்தைக் குழைத்து அப்பியது கோபம்! உதடுகளைப் 'படபடக்க' விட்டது ஆத்திரம்! திடீரென்று எதிரில் நின்ற அறுதாலியை எட்டி உதைத்தாள். அவன் அழுதான்!

அவர்களது செவிகளிலே..................

"அம்மா, அந்தப் பயல் ரொம்ப ஐ-ஃட்டிகையோ? துருதுருன்னு இருப்பானோ? அழகாக இருப்பானோ? ஏதாவது எழுத்து வாசனை உண்டா? படிப்பில்லாவிட்டாலும், சமைப்பானோ?" என்று அடுக்கினாள் அந்தப் பெண் — அவள் பெயர் மீரா—ன்.

"நாளைக்குப் பார்ப்போமே, அதற்குள் அவசரம் என்ன?" என்றாள் தலைவி.

ஊரிலிருந்து வந்திருந்த கமலா—ன் உள்ளே போன அறுதாலியின் மீது வைத்தகண் வாங்கவில்லை!

"கொள்வதைக் குணமா, மணமா பார்த்துச் செய்யுங்கோ" உள்ளிருந்த அடிமையாண் மெல்லிய குரலில் பல்லிடுக்கில் சொன்னான். அதற்குள் தலைவி சீறிவிழுந்தாள்!

"சீ, உள்ளே போ சனிதேவா, உன்னை இதிலே யார் வந்து கலந்துகொள்ளச் சொன்னா?" என்று அதட்டினாள். அடிமை கதிகலங்கிப் போனான்!

எல்லோரும் எழுந்து உள்ளே சென்றனர். கதவு தாளிடப்பட்டது. சிவகாமியும், அவளது தோழியும் திண்ணையில் வந்து அமர்ந்தனர். உள்ளே நடக்கும வாழ்க்கை நாடகத்தை அப்படியே கனுவுக்குக் கனு வெட்டி அணுவுக்கு அணுச் சுவைக்க வேண்டும் என்று எண்ணிக் காதுகளைத் தீட்டிவிட்டனர். கண்களைப் பரக்க விரிக்கத் திறந்துகொண்டனர். மூலிகை இலைக் காற்றால் 'முக்கால ஞானம்' பெற்ற அவர்களுக்கு எதுதான் தெரியாது, எதுதான் கேட்காது!

உள்ளே............

அறைக் கதவைத் திறந்துகொண்டு உள்ளே நுழைந்தாள் வீட்டுத் தலைவி விமலா—ன். ஆணடிமை மூடிய முக்காட்டை எடுக்காமல் ஒரு மூலையில் நின்றுகொண்டிருந்தான். படுக்கை தயாராக விரிக்கப்பட்டிருந்தது!

"ஏய்..."

பேச்சில்லை.

"கோபமா?"

அவன் போட்டிருந்த கருப்பு முக்காட்டை நீக்கினாள். அவன் கன்னத்தை ஆசையோடு தடவினாள். அவன் கரத்தைப் பிடித்திழுத்து வந்து கட்டிலில் உட்கார வைத்தாள்!

அவன் அதுவரை ஊமையாகவே இருந்தான். அவள் அவனைப் பார்த்துச் சிரித்தாள்!

"ஏ, பேசா மடையா......"

"...................."

"இரு, உன்னைப் பேசவைக்கிறேன்!"

அவனை இழுத்துத் தன் மடியிலமர்த்தினாள்! அவனது வெற்றிலைக் காவியேறிய உதட்டில் தன் உதடுகளைப் பதித்தாள், அடிமை சிரித்தான்!

"அப்பாடா, வெற்றிலைக் காவி..."

"ஆமாம், உங்க வாய்மட்டும் மணக்குதோ! ஒரே சுருட்டுப்புகை"

காதல் நாடகத்தை அங்கம் அங்கமாக நாம் எழுதிட முடியுமா? எழுதலாமா? இடையில் தட்டுத்தடங்கலில்லாமல் காதல் வேகம் போய்க் கொண்டிருந்தது. அதன் வேகத்தில் நடைபெற்ற நடவடிக்கைகளை அங்கு எரிந்து கொண்டிருந்த விளக்குத்தான் பார்த்துக்கொண்டிருந்தது. அதற்கும் வெட்கம தாங்காமல் தன் கண்களை மூடிக்கொண்டது!

சிவகாமியின் முகம் நாணத்தால் சிவந்தது! அவளால் இந்த 'அலங்கோல அமைப்பை'ச் சகிக்க முடியவில்லை. ஆனால் இலைச் சாற்றால் 'தெய்வீகம்' பெற்ற கண்கள் அதனைப் படம பிடித்த வண்ணம் இருந்தன.

அவள் பெருமூச்செறிந்தாள், அருகிலிருந்த தோழி அவளை உற்றுப் பார்த்தாள்!

"தூக்கமா? தேவி"

"இல்லை, இது என்ன விகாரம்?"

"விகாரமில்லை அம்மையே, பழிக்குப் பழி, இழிவுக்கு இழிவு!"

அந்த அறையின் இருட்டில் அமைதி நிலவியது! ஆகவே அவர்கள் தூங்கி விட்டார்கள் போல் தெரிந்தது.

6. கற்பிழந்தான்!

ஓடையுடன் உள்ளே சென்ற கலவடமாட்டி தன் அறையினுள் நுழைந்தான். அங்கு விளக்கு மங்கலாகஎரிந்து கொண்டிருந்தது. உள்ளே நுழைந்ததும் விளக்கை ஊதிவிட்டுத் தலையணையில் முகத்தைப் புதைத்துக் கொண்டு விம்மி விம்மி யழுதான். கண்ணீர் பெருகித் தலையணையையே நனைத்து விட்டது!

அப்புறம் அப்படியே தூங்கி விட்டான். அவன் எவ்வளவு நேரம் அழுதான், எப்பொழுது உறங்கினுன் என்று அவனுக்கே தெரியாது!

நள்ளிரவு......

மெதுவான காலடி யோசைகள்!

கொஞ்ச நேரத்தில் வந்த ஆள், அவன் அருகில் அமர்ந்தது போன்றிருந்தது!

ஐயோ......

கலவடமாட்டி விழித்துக் கொண்டு பதறினுன்.

"சூ......சத்தம் போடாதே நான்தான் கமலா—ன். கவலைப்படாதே உன்மீது கட்டுக்கடங்காத ஆசையால் நள்ளிரவில் வந்திருக்கிறேன்"

அவன் உடல் படபடத்தது!

"ஐயோ...என்னை மன்னித்துவிடு. என்னை விட்டு விடு"

"எல்லோரும் உறங்குகிருர்கள். ஏன் இப்படி நீலன் வேடம் போடுகிருய்? யாரும் பார்க்க மாட்டார்கள்!"

"உன்னை மண்டியிட்டுக் கேட்டுக் கொள்கிறேன். என் கற்பைக் கெடுக்காதே"

"என்றால் இனிப் பேசிக்கொண்டிருக்க முடியாது!"

கலவடம்மாட்டிக்கு ஒன்றும் விளங்கவில்லை. என்ன செய்வது என்று தெரியாமல் தவித்தான். தன்னந்தனியனாய் அவளிடம் மாட்டிக் கொண்டோமே என்று ஏங்கினான்! துணைக்கு வேறு பெண்ணும் இல்லையே! அக்காவை அழைத்தாலோ அவள் அவன் மீதுதான் சந்தேகப்படுவாள்!

"இப்பொழுது என்னை என்னசெய்யச் சொல்கிறாய்?"

"என் எண்ணத்திற்கு இணங்கி விடு"

"இணங்கி விட்டால் எனக்குத்தானே ஆபத்து!"

"ஏன்?"

"உனக்குக் குழந்தை பிறக்கும்"

"பிறந்தால்............"

"உங்கள் தேவியிடம் காட்டி என்னைக் கண்ணீர்க் கொப்பரையில் போட்டுக் கொதிக்கவைத்து விடுவாய்"

"இல்லை........."

கமலா—ன் உணர்ச்சி அணையாத தீயாகிவிட்டது. அந்தக் காமத்தீயைத் தணிக்கக் கலவட மாட்டியைத் துணைக்கிழுத்தாள்!

பிறகு இருட்டிலே.........

கலவடமாட்டி கோவிந்—தி கண்ணீர் பெருக்கினான். "என் கற்பைச் சூறையிட்டு விட்டாளே, இந்தப் பொல்லாதவள்" என்று புலம்பினான். விடிந்தவுடன் என்ன செய்வது என்று தெரியவில்லை.

"அந்தோ, என் ஆசை நரம்பு இப்படி அலங்கோல நாதம் கிளப்பி விட்டது! அவளுக்கென்ன கிடைத்தவரை சரியென்று போய் விட்டாள். என் பாடு......"

எதிரில் விடைசொல்ல ஆளில்லை. இருட்டிலேயே மறைந்துவிட்டாள் கமலா—ன்!

கோவிந்—தி யோசித்தான். இருட்டிலே அவன் யோசனை வெளிச்சமடித்தது!

இனி வீட்டிலிருப்பது தகாது. தலைவியின் கொடுமை தாங்க முடியாது. சுற்றும் முற்றும் குடியிருக்கும் 'மாரிக்கால மண்டுகங்கள்' சத்தம்போட ஆரம்பித்து விட்டால், நமது காதுகள்தான் செவிடாகும்! இனி, வட்டமிடும் காலிக் குட்டிகளின் கேலிக்கும், கண்ணெடிப்புக்கும் யார்தான் பதில் சொல்ல முடியும்!

அக்காளின் 'இடிக்கும், புடைக்கும்' ஈடு கொடுப்பது நம்மால் முடியாது! அவள் கோபத்தில் வெட்டிப் போட்டாலும் போட்டு விடுவாள்.

தந்தையோ அழுவார். அவரது கலங்கிய கண்கள் பார்க்கப் பரிதாபமாக இருக்கும். மற்ற மூன் — தந்தைமார்களோ கிழவர்கள்! இந்தச் சேதி கேட்டவுடன், துயரந் தாங்காமல் உயிர்விட்டாலும் விட்டு விடுவார்கள்!

.........கோவிந்—தி இப்படி எண்ணினன்!

ஆகவே எங்காவது ஓடிப்பிழைக்க வேண்டியது தான்! அதுதான் தக்கமுடிவு என்று நிர்மானித்தான்.

ஒரு சிறு மூட்டை தயார் செய்தான். மெதுவாகத் தெருக் கதவைத் திறந்தான். ஓட்டம் பிடித்தான்.

சிவகாமியும், அவளது தோழியும் சட்டென்று ஒளிந்து கொண்டார்கள்! அவன் ஓடிய பிறகு பழைய படியும் திண்ணையில் அமர்ந்தனர்.

"இந்தக் கோவிந்—தியின் துயரக் கதையை நாம் தொடர்ந்து பார்க்கவேண்டும்"

"ஆகட்டும், அரசியாரே!"

இருவரும் அவனைத் தொடர்ந்தனர்.

7. பட்டப் பகலில்!

கதிரவன் எழுந்தான்.

புகைவண்டி நிலயம் ஒரு சந்தைக்கடை போல இரைச்சலும், கூச்சலும நிறைந்திருந்தது! எங்கும் கூட்டம்.

ஒரு பெண் சில பெட்டிகளுடன் வெளியில்வந்தாள். அங்கு கலவடமாட்டி கோவிந்—தி எதிரில் நின்ருன். இப்பொழுது கலவடம் காணப்படவில்லை. அதனை எங்கேயோ எடுத்து எறிந்துவிட்டான்போலும்!

"அம்மா, நான் இப்பெட்டிகளைச் சுமந்துவருகிறேன். ஏதாவது இந்த வயிற்றைக் கழுவக் காசு கொடுங்க"

"சரி, தூக்குடா"

இந்தப் 'போர்ட்டர் பேரத்தை' வேடிக்கை பார்த்துச் சிரித்துக் கொண்டிருந்தனர் சில குறும்புக்காரச் சிறுமிகள்! கோவிந்—திக்கு நாணம் அளவுக்கு மீறிவிட்டது. என்ன செய்வான்? அந்தப் பெண் முன்னே சென்ருள். அவன் பின்னே பெட்டிகளைச் சுமந்து சென்ருன்.

கடைசியில் அவள் இருப்பிடம் வந்தது! அது ஒரு அலங்காரமான அறை!

"அடே, இப்படி உள்ளே கொண்டு வந்துவை!"

பெட்டிகளை உள்ளே கொண்டு வந்து வைத்தான்.

"அம்மாவுக்கு என்ன வேலே?"

"இங்கே படிக்கிறேன்"

"இந்தா..............."

அவள், அவன் கைகளைப்பிடித்து ஐந்து வெள்ளிப் பணங்களை அழுத்தினாள்! அவன் பயந்துவிட்டான்.

"ஏன் அம்மா, இவ்வளவு?"

"அதுவா............?"

"ஐயையோ...... அக்கிரமம், அநியாயம்! விட்டுடுங்க, விட்டுடுங்க!"

......இப்படி அவன் கூவினான். அவள் நினைத்ததை முடிக்காமல் அவனை விட்டு விடவில்லை!

கோவிந்தி தள்ளாடிக் கொண்டே வெளியில் வந்தான்! பிறகு அங்கு புதிதாகக் கட்டிக் கொண்டிருந்த ஒரு கட்டடத்தில் கல்லெடுத்துக் கொடுக்கும் வேலையை ஏற்றான்.

அங்கும் கட்டம் போட்ட சட்டை மாட்டிகள் தான் வேலைசெய்தனர். மேஸ்திரி ஒரு மின்னும் நட்சத்திரம்!

அந்தி மயங்கியதும், வேலை நிறுத்தப்பட்டது! அத்தனை பேரும் கூலிபெற்றுத் திரும்பினர். கடைசியில் கோவிந்தியின் பெயர் அழைக்கப்பட்டது!

"உன் பெயர்?"

"கோவிந்தி"

"உனக்குத் தலைவி உண்டா?"

"இருந்தாங்க, இருந்து இறந்து விட்டாங்க"

"அப்பொழுது நீ கலவடம் மாட்டியா?"

"ஆமானுங்க"

மேஸ்திரிப் பெண் ஒரு மயக்கச் சிரிப்பு வீசினாள். அவனிடம் அதன் எதிரொலியைக் கேட்க முடியவில்லை. அவன் தான் 'குட்டப்பட்ட கோமுட்டி' யாயிற்றே! ஆகவே அவன் சிரிக்க வில்லை!

"சட்டப்படி உன்கழுத்தில் இருக்க வேண்டிய கலவடம் இல்லாததால் தேவியிடம் உன்னை இழுத்துச் செல்வேன்!"

"அம்மாவோ, அதுமட்டும் வேண்டாம். கூலி இல்லாமல் ஓடச் சொன்னாலும் ஓடி விடுகிறேன்"

மேஸ்திரிப் பெண் அவனது தோளைப் பற்றி இழுத்தாள். அவன் வெட்கத்தால் தலைகுனிந்தான்!

"கூலியும் இரட்டிப்பு, வேலையும் குறைச்சல்தான்"

....

காலேஜ் குமரியைத் தோற்கடித்து விட்டாள், இந்த மேஸ்திரி 'ஸ்திரீ'!

கோவிந்—தி தடுமாறினன்...

அபலையான ஒரு ஆண் இந்த நாட்டில் ஒழுக்கமான முறையில் வாழக்கூடாதா? எங்கு சென்றாலும் பெண்மையின் 'ரைந்தான் ஆட்டமா?' இதைக் கேட்பாரில்லையா? மானத்தோடு வாழலாம் என்றுதானே கூலிவேலை செய்ய வந்தேன், அங்கேயும் இந்தக் குடிகேடிகள் என்னைக் கெடுத்து விட்டார்களே! இவர்கள் வாழ்வார்களா? கூலி தருகிறேன் என்று கூட்டிவந்து காலித்தனங்களுக்குப் பலியாக்குகிறார்களே! இது அடுக்குமா?

அவன் எண்ணக்குமிழ்களால் இதயம் வீங்கவே, தள்ளாடித் தள்ளாடி நடந்தான்.

8. கூட்டத்தில் கலவரம்

அங்கு மாபெரும் ஊர்வலம் ஒன்று நகர்ந்து கொண்டிருந்தது. அவர்கள் எழுப்பிய முழக்கம் வேடிக்கையாகத்தான் இருந்தது! அவர்கள் ஒவ்வொரு வீதியாகத் தாண்டிப் பொதுக் கூட்டம் நடக்கவிருந்த மைதானத்தை அடைந்தார்கள்?

பிறகு தலைவரின் முன்னுரை 'அனுமார்வால்' ஆகிவிட்டது!

"கண்ணீர்க் கோட்டையின் கொடுமை நெருப்பிலே வெந்து அவியும் கலவடமாட்டிகளே! இந்தப் பொதுக் கூட்டம் கலவட் மாட்டிகள் காப்பு சபையின் சார்பிலே கூட்டப்பெற்றதாகும். இந்த அவை அநாதரவான அறுதாலிகளுக்கு ஆதரவு தர ஏற்பட்டதாகும. அம்மாதிரி இதுவரை குறைந்த அளவு ஐயாயிரம் பேர்வரை இதில் சேர்ந்து செம்மையடைந்துள்ளசர்கள்.

"இன்று நாம் குழுமியிருப்பதின் நோக்கம்யாதெனில் நமது குறைகளை யெல்லாம் ஒரு தூதுக் குழுவின் மூலம் தேவியாருக்குத் தெரிவிப்பதற்காகவேயாம்!"

பிறகு சொற்பொழிவாளர் சுந்தா—மி எழுந்தான்! தனது வழக்கமான நெருப்புப் பொறிகளை வார்த்தைக்கு வார்த்தை வாரி விட்டான்!

"நாமும் பெண்களைப் போல உரிமையோடு ஏன் வாழக்கூடாது? ஆண்டவன் படைப்பில் ஆண், பெண் என்ற பேதங் கிடையாது. மக்கள் நிகர். அதிலேயும் ஆண், பெண் சமமானவரே!"

"தலைவி இறந்தால் நாம் என்ன செய்வது? அதற்காகக் கலவடமா?"

"சாஸ்திரம் தம்பி அது!"

மூலையில் நின்றிருந்த ஒரு பெண் கூவினாள் "கேலியோடு!"

"ஒரு தலைவி இறந்தவுடன், நம் இளமையும், எழிலும், பருவக் 'கிருத்திருவங்களும்' செத்து மடிவதில்லை! மறுமணம் செய்து கொண்டால்தான் என்ன?"

"சமூகச் சட்டமடா, மட்டி அது!" என்றாள் மற்றொருத்தி.

"கலவடம் மாட்டி நம்மைக் கேவலப்படுத்தவும் ஒரு சமூகம் முன்வருமானால், அந்தச் சமூகத்தை எதிர்த்துப் போராடி உடைத்து நொறுக்கவேண்டியதுதான்!"

"புரட்சி வீரர், அடி செருப்பால்"

"பிடித்துக் கட்டுடி, பயலை"

"உதையுங்கள்"

....

....

கூட்டத்தில் கலவரம், குழப்பம்! இந்தக்கூட்டம் இப்படி முடியப் போகிறது என்று தெரிந்தே ஏற்கனவே பல கலவடம் மாட்டிகள் 'கம்பி நீட்டி' விட்டார்கள்!

அங்கே கோவிந்—தியும் இருந்தான். அவன் அந்தக் காப்பு சபையில் சேர்ந்து விடலாம் என்று எண்ணிக்கொண்டிருந்தான். கூட்டம் இப்படிச் சிதறவே அருகிலிருந்த ஒரு கலவடம் மாட்டியுடன் சேர்ந்து அவனும் ஓடினான்!

"இதெல்லாம் முன் ஜென்ம பலன்"

"ஏன்?"

"ஆப்பொழுது நாம் இப்படியெல்லாம் பெண்களைப் படுத்தி வைத்தோமாம்"

"அப்படியா?"

"அதுமட்டுமா? பெண்கள் என்றால் எப்பொழுதும் கலவியாட உதவும் கருவி யென்றுதான் கருதியிருந்தோமாம். பாட்டு எழுதுகிற புலவர்கள் பெண்களை வருணிக்க ஆரம்பித்துவிட்டால் உள்ளங்காலிலிருந்து உச்சிமுடியப் பாட்டுப் பாட்டாகப் பின்னிக் கோத்துத்தள்ளி விடுவார்கள்"

"எல்லாம் நம் மூதாதையர் செய்துவிட்டுப்போக நாம் அனுபவிக்கிறோம"

இப்படிப் பேசிக்கொண்டே வழி நடந்தனர்.

சிவகாமியும், அவளது அந்தரங்கச் செயலா(!)ளியும் அங்கெல்லாம் தொடர்ந்தார்கள். அவர்கள பேச்சையெல்லாம் கேட்டுக் கொண்டார்கள். சிவகாமிக்கு இது 'காசியாத்திரை'யாகப் பட்டது!

9. ஆண்கள் விடுதி!

"உம், கோவிந்—தி, உன் எதிர்காலந்தான் என்ன?"

"ஒரே இருட்டுத்தான்"

கூடவந்த அவன் கொஞ்சநேரம் யோசிப்பதுபோலப் பாவனை செய்தான். பிறகு சிறிது நேரம் வழியிலேயே நின்ருன்.

"அப்படியானுல் என்னுடன் வந்துவிடு"

"வந்து..............."

"சுகமாக வாழலாம்"

"சொல்வதைக் கொஞ்சம் விளக்கமாகத் தான் சொல்லுங்களேன், ஐயா"

"நான் ஒரு கடை வைத்திருக்கிறேன். அதில் சிப்பந்தியாகிவிடேன்"

"இப்படிச் சொல்லுவார் யார் என்றுதான் ஏங்கிக் கிடந்தேன். தாராளமாக உங்களுடன் வந்துவிடு கிறேன்"

இருவரும் நடந்தனர். தலைவியும், தோழியும் தொடர்ந்தனர்!

அவர்கள் ஒரு வீட்டினுள் நுழைந்தனர். அது இருள் சூழ்ந்திருந்தது! அங்கு இரண்டொரு ஆண்டிமைகள் அலங்காரத்துடன் இருந்தார்கள்! இவர்களைக் கண்டவுடன் ஓடி ஒளிந்துகொண்டார்கள்.

"ஐயா, இது உம் வீடு, கடை எங்கே?"

"அதுவும் இதிலேதான்!"

"எங்கே...............?"

அவன், கோவிந்தியை அழைத்துக்கொண்டு ஒரு அறையினுள் நுழைந்தான். அங்கு மங்கலான ஒளி தெரிந்தது. அந்த வெளிச்சத்தில் ஒரு சிறுகட்டிலும், மெத்தையும் தங்களை அறிமுகப்படுத்திக்கொண்டன.

"இதுதான் கடை"

என்றான் அழுத்தந் திருத்தமாக!

"என்ன?" கோவிந்தி விழித்தான்

"இன்னுமா புரியவில்லை. இதுதான் ஆண்கள்விடுதி நமது வயிற்றுப் பிழைப்புக்கு ஏற்ற வேலை, வருகிற பெண்களுடன் கூடியிருந்து அவர்கள் விட்டெறிகிற துட்டுகளில் நமது துவண்ட வாழ்வை நிமிர்த்திக் கொள்ள வேண்டும்"

"மீண்டும் விபசார விடுதிக்கா?"

அவன் மயங்கினான். கூட்டிவந்தவனே கதவை இழுத்துச் சாத்தி விட்டு வெளியில் வந்தான்.

சிவகாமியின் உள்ளம் வீங்கி விட்டது. அவள் முகம் 'முப்பத்திரண்டு கோணல்களா'க மாறிவிட்டது!

"தோழி, இந்த விபசாரனை உடனே கைது செய். நமது நீதிக் கூடாரத்திற்கு இழுத்துவா"

"சரி தேவி"

சிவகாமி தன்மாளிகை போய்ச் சேர்ந்தாள். தோழி அந்தக் காமக் கூடத்தினுள் நுழைந்தாள்.

"ஏய், இன்றைக்குப் புதுக் கை ஏதாவது உண்டா?"

"உண்டுங்க, ஆனால் துட்டுக் கொஞ்சம் கூட ஆகுங்க"

"ரேட்டு எவ்வளவு?"

"பத்து ரூபா ஆவுங்க"

"சரி நாயே ஆசாமி எங்கே?"

தோழி மனோகரா—ன் மனத்திற்குள் சிரித்துக் கொண்டே 'சேங்காங் கடை' மொழியில் அந்த 'மன்மத பேரத்தை'ப் பேசினாள்!

பிறகு......வெறிச் சிரிப்பு வெடித்தது!

"நீங்கள் அத்தனை பேரும் கைதியாகியிருக்கிறீர்கள்! தலைவி கட்டளை!"

அந்த இடத்திலிருந்த அத்தனை பேரையும் கைது செய்து விட்டாள். பிறகு வெறிநாய்களைப் பிடித்து இழுத்து வருவது போல நடத்தியே கொண்டுவந்தாள்! ஊர்முழுதும் அவர்களைப் பார்த்துக் கேலி செய்தது! கிண்டல் புரிந்தது!

10. விசாரணை

அந்த மணிமண்டபம் அன்று புது அழகுடன் ஒளி வீசியது! எங்கும் இரத்தினக் கற்களின் ஒளிச்சிதறல் உமிழப்பட்டு மின்னல் தோன்றி மறைந்துகொண்டிருந்தது'

சிவகாமி தேவி தனது அரசு கட்டிலில் அமர்ந்தாள்.

அவையோர், தத்தம் இருக்கைகளில் உட்கார்ந்தனர். ஊர்ப் பொது மக்கள் ஏராளமாகத் திரண்டிருந்தனர்-

"விசாரணை தொடங்கட்டும்"

— தேவியின் கட்டளை இது

முரசு முழங்கிற்று. முதல் குற்றவாளி கூண்டில் வந்து நின்றான்.

"உன் பெயர்?"

"கோவிந்—தி"

"உனது குற்றம் உனக்குத் தெரியுமா?"

"தெரியும், ஓரளவு"

"என்ன தெரியும்?"

'விபசாரம்"

"நீ சொல்லப் போகும் சமாதானம் உண்டா?"

கோவிந்—தியின் முகத்தில் பிணக்களை வழிந்தது. சாவுக்குத் துணிந்துவிட்டான் என்று நன்றாகத் தெரிந்தது. சாகப் பயப்படாதவனுக்குச் சமுத்திரம் முழங்கால் அளவு என்பதுபோல அவன் யாருக்காக நடுநடுங்கிக்

கொண்டிருந்தானோ அந்தத் தேவியைச் சற்று தைரிய மாகவே விழித்துப் பார்த்தான்.

"தேவியே, ஒரு வேண்டுகோள். நீதியின் பேரால் நேர்மையின் பேரால் கேட்கிறேன். நான் கேட்கும் கேள்வி களுக்கு மட்டும் விடை சொல்லிவிடுங்கள்"

"உன் கேள்விகளை வீசு"

"நான் ஏன் ஆணாய்ப் பிறந்தேன்?"

"பிறந்ததற்குக் காரணம் உனது வீட்டுத் தலைவி யும், ஆண்டிமையும் சேர்ந்து வாழ்ந்தது! ஆனால் ஆணாய்ப் பிறந்ததற்கு அடிப்படை முன் பிறவியின் பாவம்!"

"பாவியைப் பெற்றெடுத்தாளே என் தலைவி, அவள் பாவியல்லவா? பிறந்தது மட்டும் என் குற்றமா?"

"சரி, மேலே..........."

"பார்க்க அழகாக வளர்ந்ததும் என் குற்றமா?"

"அப்புறம்..."

"என்னை மணந்த பெண்ணணங்கு என்னை இரண்டாம் தாரமாகவே ஏற்றாள். காமக்கோளாறால் இறந்து விட் டாளே! அதுவும் என் குற்றமா?"

"ஆம். நீ மணந்து கொண்ட நாளின் கோணல்தான் காரணம்!"

"அவள் இறந்த பிறகும் என் இளமையும், எழிலும், பருவகாலக் கற்பனைகளும், மனஅரிப்புகளும் மடிய வில்லையே! அதுவும் என் தவறுதானா?"

"ஆம், ஆம்"

"நள்ளிரவில் நான் பலமுறை தடுத்தும் பலவந்தப் படுத்தி என் கற்பைக் கறைப்படுத்தி விட்டாளே, அவள் ஏன் இங்கு இல்லை?"

"அவளது தூய உள்ளத்தில் காம எண்ணத்தை நீ விதைத்ததே குற்றம்!"

"மானத்தோடு வாழலாம் என்று நேர்மையான வேலைகளில் ஈடுபட்ட பொழுதும் என்னை விடாது துன்

புறுத்திய கல்லூரி மாணவியும் நேர்மையானவள் தானே?"

"சந்தேகமென்ன?"

"அந்த மேஸ்திரிப் பெண் என் கற்பைக் கொள்ளை யிட்டாளே, அவள்மீது ஏன் குற்றம் சாட்டப்படவில்லை?"

"அவள் மீது குற்றமா? ஏன், எது?"

கோவிந்—தியின் முகத்தில் கோபங் கூத்தாடிற்று. இனி அவனால் கேள்விகள் கேட்டு ஏமாற்றமை அடைய முடியாது! அவன் தொண்டையும் வரண்டு விட்டது! அவனுக்கு மயக்கம் வருவது போலிருந்தது! அந்த அவையே திருவிழாக் காலத்தில் சுற்றிவரும் இராட்டினம் போலத் தோன்றியது! அவன் கிழே விழுந்துவிடுவான் போலிருந்தது.

"மனோகரா—ன் குற்றச்சாட்டுப் பத்திரத்தைப் படித்துக்காட்டு, அவையோர் உணரட்டும்"

"குற்றவாளி கோவிந்—தி ஒரு பாவமூட்டை. கண்ணீர்க் கோட்டையில் வாழும் ஒரு ஆணடிமை. இவன் பிறந்தது, அழகாக வளர்ந்தது, பருவமகனாக மிளிர்ந்தது. கணவி (!) சாகக்காரணமாக அமைந்தது, பிறகு நம் கோட்டை தேவியர் மூவரின் தூய எண்ணத்தைப பாழாக்கியது, பிறகு கலவிக்கடையில் தங்கியது, இவைகளுக்கு மேலாகச் சமூகச் சட்டமான கலவடத்தைக் கழற்றியது......இப்படி ஆயிர மாயிரம் குற்றங்கள் புரிந்துள்ளான். இதற்குச் சாட்சிகள் தேவியாரும், அவரது அந்தரங்கத் தோழி மனோகரா—னுமே! ஆகவே விசாரணையே தேவையில்லை!

"ஆம், ஆம்"

அவையோர் ஒருமனதாகத் தெரிவித்தனர்.

"இந்த விபசாரன் கோவிந்—தியை விதவைக் கண்ணீர்க் கொப்பரையில் போட்டுக் கொதிக்க விடுங்கள். அந்த முறைகெட்ட தமிழகத்தில், நமது இனத்தவர் படும் பாட்டை இந்த அற்பன் உணரட்டும். அவர்கள் சிந்தும் கண்ணீர் எவ்வளவு வெப்பமானது என்று அறியட்டும். அந்தக் கண்ணீருக்கு உள்ள புரட்சிக் கொதிப்பை இவனது உடல் 'வெப்பமானி'யாக இருந்து தெரிந்து

கொள்ளட்டும். ஆணவக்கார ஆண் கும்பல் இன்று அடிமைகளாகியும் தனது பொல்லாத குணத்தை விட்டதாகத் தெரியவில்லை! உம் கொண்டு. போங்கள்......"

கோவிந்—தி சிரித்தான்.

"ஹா—ஹா......"

மணிமண்டபம் இடிந்து விடும் போலிருந்தது! அவன் சிரித்தான். பிறகு சீறினான்.

"அடி, சிவகாமி! ஆணவக்காரி. உன் ஆர்ப்பாட்டம் எத்தனை நாட்களுக்கு? இதோ தமிழகத்திலிருந்து சமூகச் சிப்பாய்கள் வந்து விட்டார்கள், உன்னைத் தள்ளிக் கொண்டே போகப் போகிறார்கள். அப்புறம் நீ ஒரு விதவை. முண்டச்சி. என் பாவம் உன்னை விடாது. ஆண் பாவம் பொல்லாதது. ஆண் என்றால் ஆசமரத்துப் பேயும் ஐயோ என்றிரங்கும். நீ என்னைப் பழிவாங்கி விட்டாய். நான் சாகிறேன். நீ மட்டும் வாழவா போகிறாய்?"

சிவகாமியின் மூளை குழம்பியது. தலை சுற்றியது! அவள் விழுந்து விடுவாள் போலிருந்தது. அருகிலிருந்த மனோகரா—ன் அணைத்துப் பிடித்துக் கொண்டாள்.

"அவன் ஒரு பைத்தியம்" என்றாள்.

சிவகாமியின் காதுகளில் அவ்வார்த்தைகள் விழவே இல்லை!

11. கனவு கலைந்தது

"மனோகர், நான் விழுந்து விடுவேன் போலிருக்கிறது. இறுக்கிப் பிடித்துக்கொள். என்னைத் தழுவித் தாங்கிக்கொள்" என்றாள் சிவகாமி.

"தழுவலோடு மட்டும் நிறுத்தவில்லையே. இத்தோடு பதினொன்றாவது முத்தம் பறித்து விட்டேன்"

மனோகரனின் குரல் கேட்டது.

சிவகாமி கண்களைத் திறந்தாள். அவளுக்கு ஆச்சர் யமாக இருந்தது! எதிரில் அவளது காதலன் மனோகரன் உட்கார்ந்திருந்தான்.

"சிவகாமி இது என்ன கண்கள் எல்லாம் வீங்கிவிட் டன. கண்கள் வடிந்து கன்னங்கள் வரிப்புலியாகி விட் டனவே!"

"காதலா, இந்நேரம் கண்ணீரால் கோட்டை கட்டி அதில் ஆட்சி செய்தேன்"

"ஆமாம், அது தான் பாதித்தலையணையும் நனைந்து விட்டதோ!"

"கண்ணீர்க்கோட்டை பெரிய கதை. பிறகு சொல்கிறேன். இப்பொழுது நீங்கள் எப்படி வந்தீர்கள் என்று சொல் லுங்கள்"

"சிவகாமி இன்றுதான் ஊரிலிருந்து வந்தேன். வரும் வழியிலேயே உன் பெற்றோரைப் பார்த்தேன். சினிமா பார்க்கப் போய்க் கொண்டிருந்தார்கள் என்று புரிந்து கொண்டேன். அதுவும் படம் 'விதவை விமலா' வாம்! உடனே உன்னைப் பார்க்கலாம் என்று, ஓடோடி

வந்தேன். நல்ல வேளையாகக் கதவு திறந்தே இருந்தது மெதுவாக உள்ளே நுழைந்தேன். ஒருவருமில்லை. உன் அறையில் நுழைந்தவுடன் நீ உறங்கிக் கொண்டிருந்தாய்''

''நான் உறங்கினேனா? ஆட்சி செய் திருப்பேன்'' என்று சிவகாமி இடையில் சிரித்தாள்,

சிவகாமிக்கு அப்பொழுதுதான் எல்லாம் நினைவிற்கு வந்தன.

மாலையில் பெற்றோர்கள் சினிமாப் பார்க்கப் புறப்பட்டதும், தானும வருவதாக அடம் செய்ததும், அவர்கள் முதலில் இதமாகப் பேசியதும், பிறகு புண்படுத்தும் வார்த்தைகளை வீசியதும்......அவளுக்கு நன்றாக நினைவிற்கு வந்தன. பிறகு அழுது கொண்டே அப்படியே உறங்கி விட்டாள்.

''மனோகர் என்னைக் காப்பாற்ற மாட்டீர்களா?''

''அதற்காகத்தான் ஓடோடி வந்தேன்''

''நம் எதிர்காலம் எந்த உருவில்......''

''சிவகாமி, நீ சற்று முன் சொன்னாயே, அந்தக் கண்ணீர்க் கோட்டையிலிருந்து உன்னைக் காதல் கோட்டைக்கு அழைத்துச் சொல்லப் போகிறேன்''

''அப்படி யென்றால்......''

''கள்ளிக்கோட்டைக்கு புறப்படு உடனே என்று அர்த்தம்''

''கள்ளிக்கோட்டைக்குப் போய்விட்டால் என்ன செய்வது?''

''நான் இன்ஜினியர்...''

''அப்பொழுது நான் இன்ஜினியரி''

இருவரும் சிரித்தனர். பிறகு காதல் சிட்டுகள் பறந்து விட்டன. சிறைகொண்டிருந்த கூண்டின் கதவுகள் திறந்து கிடந்தன.

புதுக்கோட்டை செந்தமிழ்ப் பதிப்பகத்தில் அச்சிடப்பெற்றது